**நாங்கள் எங்கள் வரலாற்றை எழுதவில்லை. பாரம்பரியம் என்பது பேச்சோடு நின்று விடுகிறது. நாங்கள் எதையுமே பேணிப்பாதுகாப்பதில்லை. மன்னன் சாஜஹான் காலையில் என்ன உணவு அருந்தினான் என்று தொடங்கி அத்தனையும் பதிவு செய்யப்பட்டன என்று ஒரு பத்திரிகையாளரான நண்பர் சொன்னார். அந்தளவு இல்லையென்றாலும் எங்கள் வாழ்வு, எங்கள் மக்கள், எங்கள் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும். பதிவு செய்யப்படவேண்டும்.**

**இந்த நோக்குடன் "தாய்வீடு" பத்திரிகை எங்கள் ஈழத்து மண்ணின் கிராமங்களில், ஊர்களில் வாழ்ந்த பிரபலமடைந்தவர்களுடன், தெரியப்படாமல் போய்விட்ட எங்கள் கலைஞர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டுகோள் விடுக்கிறது. கட்டுரைகளை சுருக்கமாக, எழுதி அனுப்புங்கள். களம், 'தாய்வீடு' தரக் காத்திருக்கிறது. கருத்து உங்களுடையது. கட்டுரைகளை செதுக்கி சொற்சித்திரங்களாக்கும் பொறுப்பு எங்களுடையது.**

***K.S. பாலச்சந்திரன்***

## இது ஓர் ஈழத்துக் கலைஞர்களின் பதிவுத் தொடர்...

### ஆழத்து முத்துக்கள் 03

# பொப்பிசைக் கலைஞர் நித்தி கனகரத்தினம்

போர்த்துக்கேயர்களினால் இலங்கை 1505ம் ஆண்டில் கைப்பற்றப்பட்டு 1656ல் டச்சுக்காரர்களிடம் தோற்றுப்போகும்வரை, அவர்கள் ஆட்சிக்காலத்தில் உள்ளூர் வாசிகளுக்கு 'பைலா' என்ற ஒரு புதிய இசைவடிவத்தையும் அறிமுகப்படுத்திவிட்டுப்போனார்கள். 'பைலா' என்ற இந்தச்சொல் கூட 'ஆடுவதற்காக' என்று பொருள்படும் 'பைலார்' என்ற போர்த்துக்கேயச் சொல்லில் இருந்தே வந்திருக்கிறது.

'பைலா' இசையின் தாளக்கட்டுக்கு ஏற்றபடி அமைந்து, சமூக சீர்திருத்த கருத்துக்களை தமிழ் பொப்பிசை மூலம் 1967ம் ஆண்டளவில் சொல்லப் புறப்பட்டோம் என்கிறார் பொப்பிசைப்பிதா நித்தி கனகரத்தினம். இவரைத் தொடர்ந்து பலர் துள்ளிசைப்பாடல்களை பாடிப் பிரபல்யம் அடைந்தாலும் நித்தியின் 'சின்னமாமி' இப்போதும் இலங்கை, இந்தியா, மலேசியா, மற்றும் தமிழர் வாழும் இடங்களிலெல்லாம் ஒலித்துக்கொண்டுதான் இருக்கிறது.



ஒரு சுவையான தகவல். 1977ம் ஆண்டு டிசம்பர் 10ந்திகதி மலேசிய மன்னரின் 60வது பிறந்தநாள் வைபவத்தின் போது 'சின்னமாமி' பாடப்பட்டிருக்கிறது. அதுமாத்திரமல்ல அண்மையில், 2008ல் மலேசியாவின் 45வது மெர்டெகா தினத்தில் (சுதந்திர தினம்) ஊர்வலமாகப்போன பல்லின மக்களில், தமிழ் மக்கள் பாடிக்கொண்டு போன பாடல் 'சின்ன மாமி'தான், என்கிறார் நித்தி.

இலங்கையில் உரும்பிராயில் பிறந்த நித்தி தற்போது அவுஸ்திரேலியாவின் விக்டோரியா பல்கலைக்கழகத்தில் உணவு ரசாயன விரிவுரையாளராக இருக்கிறார். அண்மையில் அவுஸ்திரேலிய சஞ்சிகை ஒன்றில், நித்தியின் பெயர் ஒரு நிகழ்ச்சி விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டிருந்து. அடடா.. எங்கோ.. சின்ன மாமியை பாடி அழைக்கப்போகிறார் என்ற பார்த்தேன். உணவு வகைகளில் இருக்கும் ஊட்டச்சத்து குறித்தும், அவை எவ்வாறு மருந்துபோலச் செயற்படும், எவற்றையெல்லாம் தவிர்க்கவேண்டும். என்றெல்லாம் அவுஸ்திரேலியாவில் மற்ற இனத்தவர்க்கும் கருத்தரங்கு நடத்துகிறார், என்பதுதான் அந்த விளம்பரம்.

1966ம் ஆண்டில் அம்பாறை ஹார்டி கல்லூரி விழாவொன்றில்தான் முதன் முதலாக சின்ன மாமியே பாடலைப் பாடியிருக்கிறார். அவரிடம் கூடவே இருக்கும் அங்கதச்சுவையின் வெளிப்பாடாக, கள்ளுக்கடைப் பக்கம் போகாதே, சோளஞ் சோறு பொங்கட்டுமா, லண்டனிலே மாப்பிளையாம் பொண்ணு கேட்கிறாங்க, ஐயையோ ஊரே கெட்டுப் போச்சு போன்ற ஏராளமான துள்ளிசைப் பாடல்களையும் நித்தி பாடியிருக்கிறார். அவர் பாடல்களை பாடும்போது, வரிகளும் இசையும் மட்டுமல்ல, அவரது ஈடுபாடும் இணைந்து ஒலிக்கிறது.

நித்தியின் "கள்ளுக்கடைப் பக்கம் போகாதே" பாடல் எம்.ஜி.ஆரின் ஆட்சிக்காலத்தில் மது விலக்குப்பிரச்சாரத்துக்கு பயன்பட்டிருக்கிறது என்கிறது ஒரு பத்திரிகைக்குறிப்பு.

ஒருமுறை கல்முனையில் கலை நிகழ்ச்சி ஒன்றில் கலந்துவிட்டு திரும்பிக் கொண்டிருந்தோம். ஒவ்வொருத்தருக்கும் அவரவர் யோசனை. ஆனால் எங்களுடன் வந்த நித்தியோ வெகு அக்கறையாக கலைஞர் கணேசபிள்ளையிடம் பாடம் கேட்டுக்கொண்டிருந்தார். காது கொடுத்து கவனித்தேன். கணேசபிள்ளை ஒரு நாட்டார் பாடல் பாடுகிறார். ''குடத்தனையிலை குடி இருக்கிறது'' நித்தி கவனமாகக் கேட்டு எழுதுவதைப் பார்த்து எங்களுக்குள் சிரித்துக்கொண்டோம். அடுத்த மேடைநிகழ்ச்சியொன்றில் நித்தி துள்ளிசையுடன், தவில் சேர்ந்து கலக்க அட்டகாசமாக பாடினார் -

*''நாம குடத்தனையிலை குடி இருக்கிறது*
*கொடிகாமத்திலை விடியப்புறம் பாலு விக்கிறது*
*வரணியாலே வந்து போறது''*

நித்தி, வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்... மன்னியுங்கள். உங்கள் கருத்துப்படி, புல்லும் ஊட்டச்சத்துள்ள உணவாகலாம்.



ksbala@thaiveedu.com

■ ■ ■

கலைஞர்கள் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

www.thaiveedu.com